நேரான பெற்றோரியக் கையேடு

1

# பதிலுக்குப்பதில் கதைத்தல் (வாய்காட்டுதல்)



உடல் ரீதியான தண்டனையைப் பயன்படுதாமல் பிள்ளைகளை ஒழுக்காற்றுப்படுத்துதல்

unicef

for every child

සෑම දරුවෙක් වෙනුවෙන්ම

ஒவ்வொரு சிறுவர்களுக்காகவும்

1

நேரான பெற்றோரியக் கையேடு

# பதிலுக்குப்பதில் கதைத்தல் (வாய்காட்டுதல்)

© ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், மார்கழி 2023

ISBN : 978-92-806-5110-2

இக்கையேட்டில் தரப்பட்டுள்ள கருத்துக்கள், கண்டுபிடிப்புக்கள், விளக்கங்கள் மற்றும் முடிவுரைகள் யாவும் எழுத்தாளருக்குரியதாகும். அத்துடன் அவை ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் கொள்கைகள் மற்றும் நோக்குகளை பிரதிநிதித்துவப்படுத்தாது.

இந்நூலானது உத்தியோகபூர்வ பதிப்பிற்கான நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படாததால், தவறுகளுக்கான பொறுப்பை ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் ஏற்றுக்கொள்ளாது. இந்த வெளியீட்டில் தரப்பட்டுள்ள பெயர்கள் எந்தவொரு நாட்டினதும் அல்லது எல்லையினதும் சட்ட அங்கீகாரம், அல்லது அதன் அதிகாரங்கள், அல்லது எல்லை நிர்ணயித்தல் பற்றிய கருத்தையும் வெளிப்படுத்தவில்லை.

இக்கையேட்டில், "தாய், தந்தை / பெற்றோர்" என்ற சொற் பதங்கள் வசதிக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தாத்தா, பாட்டி மற்றும் குடும்ப உறுப்பினர்கள், பராமரிப்பாளர்கள், அக்கறை உள்ள அனைவருக்கும் இது பொருந்தும்.

## நன்றி நவில்தல்

இந்த வெளியீடு திருமதி H.P.C. வசந்தா பத்திரனவின் MSc. (களனிப் பல்கலைக்கழகம்) M.A. (களனிப் பல்கலைக்கழகம்) B.A. (சிறப்பு) பல்கலைக்கழகம் கொழும்பு, முதற் படைப்பிலிருந்து தழுவி எடுக்கப்பட்டது மற்றும் நாங்கள் அவரது பங்களிப்புக்கு நன்றி கூறுகின்றோம்.

## நேரான பெற்றோரியக் கையேடுகள்

1. பதிலுக்குப்பதில் கதைத்தல் (வாய்காட்டுதல்)
2. சகோதரர்களுடன் சண்டை பிடித்தல்
3. பாடசாலை வேலையைப் புறக்கணித்தல்
4. வீட்டு வேலைகள் மற்றும் பொறுப்புக்கள்
5. வீட்டிற்கு தாமதமாக வருதல்
6. இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாட்டில் வரைமுறைகளை ஏற்படுத்துதல்
7. சாப்பிடும் போது அடம்பிடிப்பவர்கள்
8. ஆத்திரத்தில் வீசுதல்
9. உறவுகள்
10. படுக்கை நேரத்தைக் கடந்து கண் விழித்திருத்தல்
11. போதைபொருள் துஷ்பிரயோகம்
12. பால்நிலை

**இந்நூலை வாசிக்கும் உங்களுக்கு கீழே தரப்பட்டுள்ள உருவக குறிப்புக்கள் உதவியாயிருக்கும்**

 நேரான பெற்றோரியக் கையேடு

 ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய விடயம்

 கற்றுக்கொண்ட முக்கிய விடயங்கள்

 நடைமுறைப்படுத்தக்கூடிய ஆலோசனை

 கேள்வி

 உங்களது கருத்துக்களை எழுதுங்கள்

# நேரான பெற்றோரியம் பற்றிய ஒரு அறிமுகம்

## நேரான பெற்றோரியம் என்றால் என்ன?

நேரான பெற்றோரியம் என்பது வளர்ப்பு முறை மற்றும் விதிகளை மட்டும் உள்ளடக்கியது அல்ல. இது ஒரு நம்பிக்கை ஒரு வாழ்வியல். பிள்ளைகள் மரியாதையுடனும் வன்முறைக்கும், அவமானத்திற்கும் பயப்படாமலும் அன்பான ஊக்குவிப்புடனும் வழிநடத்தப்பட வேண்டும். நேரான பெற்றோராக மாறுவதற்கு முதலில் உங்களின் சிந்தனை அதாவது உங்கள் சொந்த அறிவு, அணுகுமுறைகள், நடத்தைகள் மற்றும் திறன்களை மேம்படுத்த வேண்டும். இதை அடைவதற்கு, பெற்றோர்கள் தங்களைப் பற்றியும் பெற்றோராக தங்களுடைய பங்கைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும். அனைத்து நடவடிக்கைகளையும் முடிக்க தங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும் மற்றும் பிள்ளைகளுடன் தினமும் கதைக்கும் போது புதிய விடயங்களைக் கதைக்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் தொடர்ந்து உறவை உறுதிப்படுத்துவதற்கு தொடர்பாடல் ஒரு முக்கிய வழி என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

## நேரான பெற்றோரியம் பற்றிய கையேடு

உடல், உள ரீதியாக தீங்கு விளைவிக்காமல் அல்லது பாதிப்பை ஏற்படுத்தாமல் ஒரு பிள்ளையை எவ்வாறு வளர்ப்பது என்பதைப் பற்றி இக்கையேடானது எம்மை சிந்திக்க வைக்கின்றது. இம்முறை நேரான பெற்றோரியம் என்று அழைக்கப்படுகிறது.

இக்கையேடு பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துகிறது:

- பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள் தமது இலக்குகளை எவ்வாறு உருவாக்குவது,
- பெற்றோர்கள் பிள்ளைகளுடன் நேரத்தை எவ்வாறு ஆக்கபூர்வமாக செலவிடுவது,
- பெற்றோர்கள் எவ்வாறு தங்களை வெளிப்படுத்துவது என்பதுடன் பிள்ளைகள் அவர்களின் உணர்வுகளை சூழலிற்கேற்ப வெளிப்படுத்த வழிகாட்டுதல்,
- பாராட்டு மற்றும் வெகுமதி வழங்குதலை எவ்வாறு கையாள்வது,
- நெறிமுறைகள் மற்றும் வீட்டு விதிமுறைகளை எவ்வாறு கையாள்வது,
- எதிரான நடத்தைகளை எவ்வாறு பொருத்தமான முறையில் கையாள்வது,
- விளைவுகளை எவ்வாறு முகாமைசெய்வது மற்றும் ஆற்றுப்படுத்திக் கொள்வதற்கான காலத்தை வரையறுப்பது,
- முரண்பாடுகளை எவ்வாறு தீர்ப்பது,

என்பது தொடர்பாக...

இக்கையேட்டைத் திரும்பத் திரும்பக் வாசிப்பதன் மூலம், உங்கள் பிள்ளைகளை நெறிப்படுத்துவதற்கு வேண்டிய பல்வேறு முறைகளைப் பற்றிய நல்ல புரிதலைப் பெறுவீர்கள்.





**நேரான பெற்றோரியம் என்றால் என்ன?**

- நேரான பெற்றோரியம் என்பது பிள்ளைகளின் சுய ஒழுக்கத்தை வளர்க்கும் ஒரு நீண்ட கால தீர்வு ஆகும்.
- நேரான பெற்றோரியம் என்பது பெற்றோர்கள், பிள்ளைகளின் எதிர்பார்ப்புகள், விதிகள் மற்றும் வரைமுறைகள் பற்றிய தெளிவான தொடர்பாடலாகும்.
- நேரான பெற்றோரியம் என்பது உங்கள் பிள்ளைகளுடன் பரஸ்பரமான மரியாதைக்குரிய உறவை உருவாக்குவதாகும்.
- நேரான பெற்றோரியம் என்பது பிள்ளைகளுக்கு வாழ்நாள் முழுவதிற்கான திறன்களைக் கற்பிப்பதாகும்.
- நேரான பெற்றோரியம் என்பது சவாலான சூழ்நிலைகளைக் கையாள்வதற்கான பிள்ளைகளின் திறமை மற்றும் நம்பிக்கையை வலுப்படுத்துவதாகும்.
- நேரான பெற்றோரியம் என்பது மரியாதை, அகிம்சை, ஒத்துணர்வு, சுயமரியாதை, மனித உரிமைகள் மற்றும் பிறருக்கான மரியாதை என்பவற்றைக் கற்பிப்பதாகும்.

**நேரான பெற்றோரியம் அல்லாதவை எவை:**

- பிள்ளைகளின் அனைத்து செயல்களையும் அனுமதிப்பது நேரான பெற்றோரியம் அல்ல.
- பிள்ளைகளை அவர்கள் விரும்பிய அனைத்தையும் செயற்படுத்த அனுமதிப்பது நேரான பெற்றோரியம் அல்ல.
- விதிகள், வரைமுறைகள் அல்லது எதிர்பார்ப்புகள் இல்லாதவையாகும்.
- குறுகிய கால விளைவுகள் அல்லது உடல் ரீதியாக தண்டிப்பதற்கான மாற்று தண்டனைகள் நேரான பெற்றோரியம் அல்ல.



பிள்ளைகள் கீழ்ப்படிவாக இல்லை என்பதே பெற்றோர்களிடமுள்ள பொதுவான முறைப்பாடாகும்.

“இந்தப் பிள்ளை கீழ்ப்படிவதே இல்லை. சொல்லும் எதனையும் கேட்பதில்லை” “வேண்டாம் என்று சொல்வதனையே செய்கிறார்கள். கீழ்ப்படிவதே இல்லை”. உங்கள் குடும்பத்தில் இது போன்ற கூற்றுக்கள் கூறப்படுகிறதா? உங்கள் பிள்ளைகள் கீழ்ப்படியாதவர்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

உங்களது அவதானிப்பின்படி, கீழ்ப்படிவுள்ள பிள்ளையின் இயல்புகள் எவை? கீழ்ப்படிவற்ற பிள்ளையின் இயல்புகள் எவை?

அவற்றினை தனித்தனியாகப் பட்டியலிடுக.

| **கீழ்ப்படியாமை** | **கீழ்ப்படிதல்** |
| --- | --- |
| | |

நீங்கள் குறிப்பிடும் பிள்ளையொன்றின் கீழ்ப்படிதல் தொடர்பான விடயங்களின் பட்டியலுடன், வேறொரு பெற்றோர் கீழ்ப்படிதல் என அவர் கருதும் விடயங்களின் பட்டியலுடன் ஒப்பிட்டுப் பார்த்து, கலந்துரையாடுங்கள். அந்த இரண்டு பட்டியல்களிலும் ஒத்த மற்றும் வேறான விடயங்களை நீங்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

உங்கள் சொந்த பெற்றோரிய முறைமைகளைப் பற்றி சிந்தித்து, பிள்ளையின் இந்த நடத்தைக்கு நீங்கள் எவ்வாறு பங்களிப்பு செய்கின்றீர்கள் என்பதை அவதானியுங்கள்.

இவ் வேறுபாடுகள் எடுத்துக்காட்டுவது என்னவெனில், கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாமை என நாம் சிந்திப்பதுடன் தொடர்புடைய காரணிகள் அவை, மற்றவர் அதைப் பற்றி சிந்திக்கும் விதத்திலிருந்து வேறுபட்டது என்பது தெளிவாகின்றது.

நீங்கள் உங்கள் பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்க்கும் அல்லது மாற்ற விரும்பும் முக்கிய நடத்தைகள் பற்றிய தெளிவான புரிதலை நீங்கள் பெற்றவுடன், இந்த நடத்தைகளை மாற்றுவதற்கு கீழே உள்ள உத்திகளை முயற்சிக்கவும், அத்துடன் உங்கள் பிள்ளை சுதந்திரமாக சிந்திக்கவும் செயல்படவும் உதவுங்கள்.



1. வீட்டில் சிறந்த மற்றும் தீய நடத்தைகள் எனக் கருதுபவற்றையும் இந்த நடத்தைகளின் வரையறைகள் மற்றும் வரைமுறைகளை கடைப்பிடிக்காததால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் பட்டியலிடுங்கள். உங்கள் பிள்ளை / பிள்ளைகளின் வயதைப் பொறுத்து, அவர்களுடன் இணைந்து இவற்றைச் செய்து, இந்தப் பட்டியலை வீட்டில் அனைவரும் பார்க்கக்கூடிய இடத்தில் காட்சிப்படுத்துங்கள்.

2. ஒவ்வொரு முறையும் பிள்ளை சிறந்த நடத்தையை வெளிப்படுத்தும் போது அவரைப் பாராட்டுவதுடன் உங்கள் பிள்ளை மீது நீங்கள் காட்டும் அன்பு நிபந்தனையற்றதாகவும் உண்மையானதாகவும் இருக்க வேண்டும்.

3. பெற்றோர்கள் பிள்ளைகளை எப்போதும் விரும்பும் அதே வேளை அவர்களின் தவறான நடத்தைகளையே விரும்புவதில்லை, ஏற்றுக்கொள்வதில்லை.

சில சமயங்களில், பிள்ளை வளர்ப்பு கடினமானதாக இருக்கலாம்! எனவே, நேரான பெற்றோரியம் வெற்றிபெற நேரமும் பொறுமையும் அவசியமானது என்பதை மனதில் கொள்ள வேண்டும். இதனை ஒரே நாளில் அடைந்துவிட முடியாது. அவை இன்று பயனளிக்கவில்லை என்றால், மீண்டும் மறக்காமல் முயற்சிக்கவும். உங்கள் பெற்றோரியம் தொடர்பான அணுகுமுறையில் உறுதியாகவும், சீராகவும் இருப்பது முக்கியம் இவ் அணுகுமுறை உங்கள் பிள்ளைக்கு நீங்கள் என்ன சொல்ல முயற்சிக்கிறீர்கள் என்பதை புரிந்து கொள்ள உதவும்.

**உசாத்துணை**

National Parenting Taskforce, (2013), *The Art of Parenting: Summary Guide,* Parenting Guide_Summary Guide.pdf (sharepoint.com)

Parenting for Lifelong Health: Handbook for Adolescents





# பதிலுக்குப்பதில் கதைத்தல் (வாய்காட்டுதல்)



பிள்ளைகள் பதிலுக்குப்பதில் கதைப்பது பல பெற்றோர்கள் எதிர்கொள்ளும் ஒரு பிரச்சினையாகும். இது உங்களைக் கோபமாகவும் விரக்தியாகவும் உணரச் செய்யலாம், அத்துடன் பெற்றோர்கள் உடல் ரீதியான தண்டனையை நாடுவதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாக இருக்கலாம். உங்கள் பிள்ளைகள் ஏன் பதிலுக்குப் பதில் கதைக்கிறார்கள் என்பதையும், அவ்வாறான நிலைமையை எவ்வாறு அமைதியாகவும், திறம்படவும் சமாளிப்பது என்பதைப் புரிந்துகொள்வதும் அவசியமானதாகும்.

## பிள்ளைகள் யாரிடம் பதிலுக்குப்பதில் கதைக்கின்றனர்? ஏன் பெரியவர்களிடம் பிள்ளைகள் பதிலுக்குப்பதில் கதைக்கின்றனர்?

பெற்றோர் அல்லது பெரியோர் பிள்ளைகளுக்குப் பின்வருமாறு கூறுவதனை நாம் அனைவரும் கேட்டிருப்போம்.

"என்னோடு பதிலுக்குப்பதில் கதைக்க வேண்டாம். உனக்கு வாய் அதிகம்"

"வாய்காட்டிக் கொண்டு வர வேண்டாம், நான் திரும்பவும் சொல்ல மாட்டேன்"

"இங்கு அந்தப் பெரியவர் அதிக கோபத்திலேயே இவ்வாறு கூறுகிறார் என்பது எமக்குத் தெரிகின்றது." அப்படிப்பட்ட நேரத்தில், இந்தப் பதிலுக்குப்பதில் சொல்வது என்பதன் மூலம் கூறப்படுவது யாதெனில், அம்மா அல்லது அப்பா விரும்பாத காரியமொன்றை பிள்ளை செய்கின்றது அல்லது பெரியவருக்கு கோபத்தை ஏற்படுத்தும் விடயமொன்றைப் பிள்ளை செய்கின்றது என்பதாகும். உண்மையில் "பதிலுக்குப்பதில் கதைத்தல்" என்பதன் அர்த்தம் என்ன?

?

அனைத்துக்கும் முதலில், பிள்ளை பதிலுக்குப்பதில் கதைக்கின்றது என்பதன் அர்த்தம் என்னவென நீங்கள் ஒரு பெற்றோராக அல்லது பெரியவராக சற்று சிந்தித்துப்பாருங்கள். உங்கள் பதிலைக் கீழே எழுதுங்கள்.

## இப்போது பதிலுக்குப்பதில் கதைத்தல் என்பதன் அர்த்தம் என்னவென்று பார்ப்போம்.

எளிதாகக் கூறுவதாயின் பெரியோர் பிள்ளைக்கு கோரிக்கையொன்றை முன்வைக்கும் போது அல்லது ஒரு விடயத்தைக் கூறும் போது, பிள்ளை அதற்கு எதிராக கருத்தினை வெளியிடுவதாகும். பிள்ளை பெரியவர்களோடு பதிலுக்குப்பதில் கதைக்கும்போது, அவர்கள்

கூறும் விடயத்தைப் பிள்ளைகள் கேலியாக எடுத்துக் கொள்கின்றனர் அல்லது ஒரு சதத்திற்கேனும் மதிப்பு கொடுக்காது கதைக்கின்றனர் என்ற உணர்வே பெரியோர்களுக்கு ஏற்படுகின்றது. இந்த உணர்வு பெரியோர்களுக்கு சில சமயங்களில் கடுங்கோபத்தையும், வேதனையையும் அல்லது கலக்கத்தையும் ஏற்படுத்தக்கூடும். இதனால் இவ்வாறான சூழ்நிலைகளில் பெரியோர் பொறுமையுடன் செயற்படுவது மிகக்கடினமானதாக இருக்கும் அல்லது பொறுமையை இழக்க நேரிடும்.

## பிள்ளைகள் யாரிடம் பதிலுக்குப்பதில் பேசுகின்றனர்?

இது மிக முக்கியமான கேள்வியாகும். அம்மா, அப்பா, பாட்டி, தாத்தா, மாமி, மாமா, அண்ணா, அக்கா போன்ற பெரியவர்களுடன் பிள்ளை பதிலுக்குப்பதில் கதைக்கலாம். பிள்ளைகள் பாடசாலையில் ஆசிரியருடன் அல்லது வேறு சந்தப்பத்தில் வயது வந்தவருடன் அல்லது அதிகாரத்தில் இருப்பவருடன் எதிர்வாதம் புரியலாம்.

### சிறிய கதையொன்று

பவனின் வயது 11 பாடசாலையிலிருந்து வீட்டிற்கு வந்த அவன், பாடசாலைப் புத்தகப்பையை நாற்காலி ஒன்றின் மீது வீசிவிட்டு சமையலறைக்கு ஓடினான். அப்போது பவனின் அம்மாவும், அம்மம்மாவும் சமையலறையில் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தனர். பவன் சோற்றுப் பானையைத் திறந்து பார்க்கும் போது அம்மா இவ்வாறு கூறினார்,

"சோற்றுப் பானையைத் தொட வேண்டாம். வீட்டிற்கு வந்தவுடன் சாப்பிட நினைத்துக் கொண்டே ஓடி வருகின்றாய். கை கால்களை அலம்பிவிட்டு சுத்தமாக அமர்ந்து உண்ண வேண்டும் எனத் தெரியாதா?" அம்மாவை நோக்கி திரும்பிய பவன் வாயை சுழித்துக் கொண்டே "அப்போ...

கை கால்களை அலம்பிவிட்டு ஒழுங்காக சாப்பிட வேண்டும்" என அம்மா கூறியவாறே நடித்துக் காட்டினான்.

"கேலி, நையாண்டி செய்து கொண்டு வரவேண்டாம், பவன்! போ. சொன்ன பேச்சு கேட்காவிட்டால் இன்று சாப்பாடு தரமாட்டேன்"

அம்மா அவ்வாறு சொல்லும் போது "கையை அலம்பிவிட்டு சாப்பிடுகிறேன். காலால் சாப்பிட முடியாது தானே! அதனால் அதை கழுவத் தேவையில்லை" எனக் கூறிக் கொண்டு கைகளை மாத்திரம் அலம்பிவிட்டு தட்டில் சோற்றை எடுத்துப் போட்டுக் கொண்டான். உணவைத் தட்டில் போட்டு, சட்டியை மூடும் சத்தம் அம்மாவுக்கு கேட்டதும், மீண்டும் அம்மா சத்தம் போட்டார்.

"அத்தனை சத்தமாக ஏன் சட்டியை மூடுகின்றாய்? சட்டியை உடைக்கவா போகிறாய்?"

கிண்டலாக சிரித்த பவன், "இந்தப் பழைய சட்டியின் சத்தம், அம்மாவின் சத்தம் போலவே இருக்கின்றது" எனக் கூறினான். அம்மா விசனமான முகத்துடன் பவனைப் பார்த்துக் கொண்டிருந்தார். சோற்றுத் தட்டினை ஒரு கையில் எடுத்த

பவன் மற்றைய கையில் தண்ணீர்க் கோப்பையை எடுத்தான். இரண்டையும் எடுத்துக் கொண்டு சென்ற போது கோப்பையிலிருந்து தண்ணீர் கொஞ்சம் கீழே விழுந்தது.

இதனைப் பார்த்த அம்மம்மா, "பார்த்தீர்கள் தானே, தண்ணீரையும்



கொட்டி விட்டீர்கள். கை கால்களில் சக்தி இல்லையா, யாரேனும் வழுக்கி விழுந்தால்...” என அவரும் திட்ட ஆரம்பித்தார்.

“உங்கள் கை கால்களில் தான் சக்தி இல்லை. நீங்கள்தான் வழுக்கி விழுவீர்கள்” என பவன் எதிர்த்துப் பேசினான். பவன் அவ்வாறு கூறிய விதம் அம்மாவுக்குக் கோபத்தை ஏற்படுத்தியது.

“அம்மம்மாவிற்கும் பதிலுக்கு பதில் கதைப்பீரா? வாயை மூடிக்கொண்டு சாப்பிடு”

அம்மா அவ்வாறு சொல்லும் போது, பவன் மீண்டும் கிண்டலாக சிரித்துக் கொண்டு “வாயை மூடிக்கொண்டு எப்படிச் சாப்பிடுவது” எனப் பதில் சொன்னான்.

“பவன்... உனக்கு வாய் அதிகம். சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு கடைக்குப் போய் வா” என அம்மா கூறினார்.

“என்னால் கடைக்குப் போக முடியாது... நீங்கள் போங்கள், சும்மா வீண்பேச்சு தானே பேசுகிறீர்கள்...”

“என்ன சொன்னாய், வீண் பேச்சு பேசுகிறேனா? காலையிலிருந்து, இரவு வரை சோறு வைக்கவும், உடுப்பு கழுவவும், வீட்டு வேலையையும்... என எல்லாவற்றையும் நான் தனியாக செய்து கொண்டிருக்கின்றேன்...”

அம்மா அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது பவன் இடையில் புகுந்து “அம்மா என்று சொன்னால் இதையெல்லாம் செய்ய வேண்டும் தானே” எனக் கூறினான்.

இதையெல்லாம் கேட்டபோது அம்மா பொறுமையை இழந்து, கோபத்துடன் சத்தம் போட்டார்.

“பார்த்தீர்களா இவன் கதைக்கும் விதத்தை! அந்த வாயை நான் உடைப்பேன். எனக்கு பேய்க் கோபத்தை ஏற்படுத்தாமல், கடைக்குப் போ...” அம்மா அவ்வாறு கூறும்போது, பவனுக்கு சிரிப்பு வந்தது.

பவன் தனது வசனத்தை முடிக்கும் முன்னர், அம்மாவின் அடி பவனின் முதுகில் விழுந்தது. இதனால் பவனின் கையிலிருந்து சோற்றுத் தட்டு கீழே விழுந்து உடைந்தது. சமையலறை முழுவதும் சோறும், தட்டின் உடைந்த துண்டுகளும் சிதறியது.



பவனின் கதையைப் பார்ப்போம்

? பவன் செயற்பட்ட விதம் அல்லது அவன் பேசிய விடயங்கள் குறித்து உங்களது கருத்துக்கள் எவை?

? அவ்வாறான சூழ்நிலைகளில், அம்மாவின் செயற்பாட்டிற்கு அல்லது அம்மாவின் கோபத்திற்கு, அல்லது அம்மா பவனுக்கு அடித்ததன் காரணம், பவனின் செயல்களா? அல்லது கதைத்த விடயங்களா?



பவனின் அம்மா பொறுமையை இழந்ததற்கு, அல்லது அவருக்கு கோபம் அல்லது ஆக்ரோஷம் ஏற்பட, காரணமாக இருந்த பவனின் செயல்கள் மற்றும் கதைத்த விடயங்கள் பற்றிய பட்டியலொன்றைத் தயாரியுங்கள்

அவ்வாறே கீழுள்ளவற்றிற்கு உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள்:

| பவன் பேசிய, செய்த ஏற்றுக்கொள்ளத் தகாத விடயங்கள | உதாரணங்கள் |
|---|---|
| பிள்ளைக்கு நல்ல பழக்கம் குறித்து நினைவுபடுத்தும் போது வாய்காட்டுதல் | சோறு சாப்பிடுவதற்கு முன்னர் கை கால்களை கழுவுமாறு பவனுக்கு அம்மா கூறியபோது அதற்கு எதிராகக் கதைத்தமை. |
| பெற்றோர் கூறிய விடயத்தை பரிகாசமாக/ ஏளனமாகச் செய்து காட்டல். | உசுப்பேற்றிவிடல், வாயைச் சுழித்தல், கண்களைச் சுழற்றல், கை கால்களை ஆட்டி நடித்தல். |
| செய்ய வேண்டாம் என்று கூறியதையே செய்தல். | கதைக்காது சோறு சாப்பிடுமாறு கூறியபோது, வாயை மூடிக்கொண்டு சாப்பிட முடியாது எனக் கூறல் |
| அம்மாவுடன் மாத்திரமன்றி, அம்மம்மாவுடனும் சொன்ன விடயத்தைக் கவனத்தில் எடுக்காது செயற்பட்டு அவரையும் பரிகாசம் செய்தல். | அம்மா வீண் பேச்சு பேசிக் கொணடிருக்கிறார் எனக் கூறல் |
| இரண்டாவது தடவை எச்சரித்தபோது அதனைக் கேலியாக எடுத்துக் கொண்டமை. | தண்ணீர் கொட்டியதும், அதில் வழுக்கி விழுவீர்களா என அம்மம்மாவைக் கேலி செய்த போது |
| தர்க்கம் செய்தல். | |
| அம்மா செய்த எச்சரிக்கையை கவனத்தில் கொள்ளாமை. | “எனக்கு பேய்க் கோபத்தை ஏற்படுத்த வேண்டாம், பதிலுக்குப்பதில் கதைக்க வேண்டாம்” எனக்கூறும் போது அவற்றைக் கவனத்தில் கொள்ளாமை. |

நாம் மேலே கூறியவை பெரியோரை விரக்தியடையச் செய்வதற்கும் மற்றும் அடிப்பதற்கும் வழிவகுக்கும் சம்பவங்கள்.

## பிள்ளை பதிலுக்குப்பதில் கதைப்பதற்கான காரணங்கள் எவையென தற்போது பார்க்கலாம்.

ஒரு பிள்ளை பதிலுக்குப்பதில் கதைப்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

- ஒரு பிள்ளை பதிலுக்குப்பதில் கதைப்பதன் மூலம் தன்னுடைய ஒரு உணர்வை அல்லது தேவையை வெளிப்படுத்த முயற்சி செய்யலாம்.

  வளர்ந்தவரைப் போன்று தனது கருத்துகளை, உணர்வுகளை, தேவைகளை நன்கு வெளிப்படுத்தும் ஆற்றல் மற்றும் திறமை பிள்ளைக்கு வளர்ச்சியடைந்திருக்காது. எனவே, அவரது தேவைக்கு அல்லது உணர்வுக்கு எம்மிடமிருந்து சிறந்த பதில் கிடைக்காதபோது, அல்லது நாம் அதனைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையென பிள்ளை கருதும்போது, எமது கவனத்தை அவ ர் பக்கம் செலுத்துவதற்கு பிள்ளை பதிலுக்குப்பதில் பேசக்கூடும். மறுபுறத்தில், பிள்ளை அவரது பயம், வேதனை, வெறுப்பு, கோபம், அதிருப்தி, மற்றும் மகிழ்ச்சி என்பவற்றையும் அதன் மூலம் வெளிப்படுத்தக் கூடும்.

  > உதாரணம்: ஒரு பிள்ளை படுக்கைக்கு செல்ல மறுக்கலாம். தாய் பிள்ளையை படுக்கைக்கு செல்ல வற்புறுத்தலாம், அந்த நேரத்தில் பிள்ளை பதிலுக்குப்பதில் கதைப்பதுடன் தாய் கூறியதை மறுக்கவும் கூடும்.
  >
  > இருப்பினும், பிள்ளை வெறுமனே தவறாக நடப்பதாக பெற்றோர் உணரலாம், ஆனால் பிள்ளை இருள் அல்லது கனவுகளுக்குப் பயந்து அவ்வாறான நடத்தையை வெளிப்படுத்தலாம்.

- பின்பற்றுதல் என்பதும் இவ்வாறு பதிலுக்குப்பதில் பேசுவதற்கான மற்றொரு காரணமாக இருக்கக்கூடும்.

  > உ-ம்: பிள்ளை பார்த்த தொலைக்காட்சி நிகழ்ச்சியில், ஏதாவது ஒரு கதாபாத்திரம், அல்லது வீட்டிலுள்ள வேறொரு பெரியவர் அவ்வாறு நடந்துகொண்டபடியால், அதனைப் பார்த்துப் பிள்ளையும் அவ்வாறே நடந்து கொள்ளலாம்.

- மற்றொரு காரணம் நண்பர்களின் அழுத்தம், அதாவது அவர்கள் தங்களுடைய நண்பர்கள் பதிலுக்குப்பதில் கதைப்பதைப் பார்க்கிறார்கள், மேலும் தங்களுடைய வரம்புகளையும் எல்லைகளையும் பரிசோதித்துப் பார்க்கிறார்கள்.

- தமக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு அல்லது வேலையொன்றை கைவிட்டு விடுவதற்கும் அல்லது அதனை செய்யாதிருப்பதற்கும், பிள்ளை உங்களுக்குப் பதிலுக்குப்பதில் கதைக்கலாம். நாம் அவரை வேலை ஒன்றை செய்யச் சொல்லும் போது, அந்த நேரத்தில் அதனைச் செய்வதற்கான தைரியம் பிள்ளைக்கு இல்லாதபோது, சோம்பல் உணர்வு



ஏற்படும்போது, அல்லது அவரது மனதில் அந்த சந்தர்ப்பத்தில் செய்வதற்கு வேறு திட்டம் இருப்பின், அத்திட்டத்திற்குத் தடை அல்லது இடையூறு ஏற்படும், அல்லது திட்டமிட்ட அந்த நேரம் தமக்கு இல்லாது போகும் என்ற காரணத்தினாலும் பிள்ளை பதிலுக்குப்பதில் கதைக்கலாம்.

உ-ம்: பிள்ளை பாடசாலையை விட்டு வந்தவுடன் உணவு உட்கொண்டு விட்டு விளையாடச் செல்வதற்கு நினைத்திருக்கலாம். ஆனால் கடைக்குச் செல்வது அவரது விளையாட்டுக்குத் தடையாக இருக்குமென அவர் கருதினால் அதனைத் தடுப்பதற்கு ஏதாவதொரு விடயத்தை கூறலாம், அல்லது செய்யலாம். (ஏனெனில், இந்த சந்தர்ப்பத்தில் தமது தேவையைக் கூறினால் பயனில்லை என அவருக்குத் தெரியும்).



# வளரிளம் பருவப் பிள்ளைகள்

**வளரிளம் பருவத்தில், பிள்ளைகள் ஆக்ரோக்ஷமாக, நாகரீகமற்று அல்லது மரியாதைக் குறைவாகப் பேசலாம். இந்த நடத்தை பெரும்பாலான வளரிளம் பருவத்தினரிடையே பொதுவானது என்பதால் நாம் இதனைப் புறக்கணிக்க வேண்டுமா?**

(பிகார்ட் 2020) தனது கட்டுரையில் 'வளரிளம் பருவத்தை' மேலும் கேள்வி கேட்பதற்கும், புகார் செய்வதற்கும், பெற்றோருடன் வாதாடுவதற்குமான ஒரு காலமாக எடுத்துக்காட்டுகிறார்.

இதனால் இந்த நடத்தை வளரிளம் பருவத்தினரைப் பிடிவாதம் மற்றும் ஒழுக்கமற்றவராகவும் சித்தரிக்க வாய்ப்பாக உள்ளது. வளர்ந்த பிள்ளைகள் பதிலுக்குப்பதில் கதைக்கும்போது, (முன்னர் கூறியதைப்போல வாயை சுழித்தல், உடலால் கேலி செய்தல், மற்றும் அநாகரீகமான வார்த்தைகளைப் பயன்படுத்தல், அத்துடன் வீட்டுக் கதவு, ஜன்னல்களை ஓங்கி அடித்தல், அல்லது வேகமாக மூடுதல் போன்றவற்றை செய்தல்) அது பெரியவர்களின் மனதைப் பெருமளவில் பாதிக்கின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களைக் கட்டுப்படுத்துவது சில சந்தர்ப்பங்களில் சவாலானதாக இருப்பினும் அதனை செய்வது அவசியமானதாகும்.

வளரிளம் பருவத்தினர் என்ன சொல்லலாம் என்பதற்கான சில எடுத்துக்காட்டுகள்:

"எனக்கு யார் கூறுவதையும் கேட்க வேண்டிய தேவை இல்லை"

"அது நியாயமனது அல்ல"

"எனக்கு யாருடைய அறிவுரையையும், கதையையும் கேட்கத் தேவை இல்லை"

பிள்ளைகள் தமது உணர்வுகளை மிகவும் பொருத்தமான முறையில் வெளிப்படுத்துவதற்குப் பெற்றோர்களாகிய நாம் அவர்களைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு உதவ வேண்டும்.

## பிள்ளை பதிலுக்குப்பதில் கூறும்போது அல்லது பரிகாசமாக உங்களை அச்சுறுத்தும் வகையில், குறைத்து மதிப்பிட்டு கதைக்கும் போது நீங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும்?

நிச்சயமாக, ஒரு பிள்ளை பதிலுக்குப்பதில் கதைக்கும் போது, கோபமாக பதிலளிக்காமல் இருப்பது கடினம். ஆனாலும் அவ்வாறிருப்பது புத்திசாலித்தனமான செயலாகும். உங்கள் பிள்ளையைத் தொந்தரவு செய்யும் விடயத்தைக் கண்டறிய முயற்சித்து, அவரது கடினமான உணர்ச்சிகளை மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வெளிப்படுத்த அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள்.

1. அவ்வாறான செயல்களை நீங்கள் மதிக்க மாட்டீர்களென பிள்ளைக்கு காரணத்துடன் தெளிவாகக் கூறுவது முக்கியமானதாகும். எனவே, சில முரட்டுத்தனமான வார்த்தைகள் அல்லது வெளிப்பாடுகளைப் பயன்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும், அல்லது உங்கள் பிள்ளை கிண்டல் செய்வது அல்லது கேலியாகப் பேசுவது உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், அந்த நடத்தையை நீங்கள் ஏற்கவில்லை என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

   உ-ம்: "நான் உன்னிடம் பேசும் போது கண்ணைச் சுழற்றுவது அவமரியாதையாகத் தெரிகிறது. தயவு செய்து அவ்வாறு செய்யவேண்டாம் எனக்கூறுங்கள்."

2. அமைதியாக இருங்கள். பிள்ளை சொன்னதற்கு உங்கள் தொனியை உயர்த்தி அல்லது கோபமாக பதிலளிப்பதன் மூலம் நிலைமையை மேலும் மோசமாக்க முயற்சிக்காதீர்கள். உங்கள் பிள்ளைக்கு மரியாதையுடன் பேச கற்றுக்கொடுப்பதற்கான சிறந்த வழி, அதை நீங்களே செய்வதுதான். அவனிடம் / அவளிடம் சொல்லுங்கள்,

   உ-ம்: "அதைச் சொல்வதற்கு நீங்கள் ஒரு சிறந்த வழியைக் கண்டுபிடிக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்."

3. எப்போது அமைதியாக இருக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். ஒரு பிள்ளை தொடர்ந்து பேசினால், பதிலளிப்பது அல்லது பேச்சுவார்த்தை நடத்த முயற்சிப்பது பிள்ளையை அதைத் தொடர்ந்து செய்ய ஊக்குவிக்கும்.

   அவ்வாறே, அவர் சரியாக நடந்து கொள்வதற்கு அவகாசம் அளியுங்கள். அதற்குப் பின்வருமாறு கூறுங்கள். "நான் இதுபற்றி கதைப்பதனை இப்போது நிறுத்துகிறேன். நீங்கள் இன்னும் ஒரு மணித்தியாலத்தின் பின் இது குறித்து நிதானமாகக் கதைக்க ஆயத்தமென்றால், நானும் உங்களோடு கதைக்கத் தயார் இல்லாவிடின், நீங்கள் பேசும் விடயங்களினால் எனக்கு வேதனை/துன்பம்/கோபம் தான் ஏற்படும்".



## ஏனையோர் முன் அல்லது வீட்டிற்கு  வெளியிடங்களில் இவ்வாறு பிள்ளை பதிலுக்குப்பதில் கதைத்தால் என்ன செய்ய வேண்டும்?

பொது இடங்களில் பதிலக்குப் பதில் கதைத்தலை எதிர்நோக்கினால் பயப்படவோ அல்லது மிரட்டவோ வேண்டாம் பிள்ளைக்கு அமைதியாக எங்கே எப்போது என்றில்லாமல் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுதல் பொருத்தமற்றது என விளக்குங்கள். அவர் அதை மீண்டும் செய்தால் அமைதியான இடத்தினை அடையாளம் கண்டு இவ்வாறான செயற்பாட்டிற்கான பின்விளைவுகள் இருக்கும் என்பதைக் கூறுங்கள். பின்விளைவுகளான விருப்பமான TV நிகழ்ச்சியை இழத்தல், விளையாடுவதை நிறுத்துதல், நண்பர்களுடன் விளையாடுவதற்கான நாளை நிறுத்துதல். உங்கள் பிள்ளைகளிடம் நீங்கள் உங்கள் பிள்ளைகளை மதிப்பதை வெளிப்படுத்துங்கள் இவ்வாறு நடந்துகொள்வது மதிப்பைப் பெற்றுக்கொள்ள உதவும்.

பின்னர் தகுந்த நேரமும் சந்தர்ப்பமும் கிடைக்கும் பொழுது பிள்ளையுடன் கதையுங்கள். ஏன் அவ்வாறு நடந்தமை பொருத்தமற்றது எனப் பிள்ளைக்கு விளங்கப்படுத்துங்கள்.

## பதிலுக்குப்பதில் கூறும் நிலைமையை கையாளுவதற்கான உத்திகள்

1. **வயது முதிர்ந்தவர்களை மதித்தல் மற்றவர்களுடன் உற்சாகமாகவும் ஏற்கத்தகு வகையிலும் கதைத்தல் ஆகியவற்றின் அர்த்தம் என்ன என்பதனை உங்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடுங்கள்.**

   உங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஏற்றுக் கொள்ள முடியாத நடத்தைகள் பற்றி பிள்ளைக்கு அன்பாக விளங்கப்படுத்துங்கள்.

2. **பதிலுக்குப்பதில் பேசுவதனால் ஏற்படக்கூடிய வேறு மோசமான விளைவுகள் குறித்து பிள்ளைக்கு விளக்குங்கள்.**

3. **ஒருவரோடு உரையாடும்போது ஏனையோரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் நாம் வளர்த்துக்கொள்ள வேண்டிய முக்கியமான பண்பு  என்பதனைப் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுங்கள்.**

4. **பிள்ளைகள் தமது தேவையை முன்வைக்கும் போது தைரியப்படுத்துங்கள்.**

   அவ்வாறான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுங்கள். அவற்றுக்கு செவி கொடுங்கள். அவற்றை நிறைவேற்றுவதற்கு எவ்வாறு அணுக வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுங்கள்.

5. **ஏனையோரின் மனதைக் காயப்படுத்தக்கூடிய வார்த்தைகளைப் பயன்படுத்துவதால்**



**ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து தெளிவாகக் கற்றுக் கொடுங்கள்.**

ஏனையோரின் மனதை வெல்வதற்காகக் கதைக்கும்போது பயன்படுத்தக்கூடிய முக்கியமான வார்த்தைகள் அல்லது வாசகங்களை பிள்ளைக்குச் சொல்லிக் கொடுங்கள்.

> உ-ம்: மன்னிக்கவும். (Sorry) நன்றி (Thank You). நான் சொல்வதையும் சற்று கேளுங்கள். நீங்கள் மிகவும் நல்லவர். நான் கொஞ்ச நேரத்திற்குப் பின்னர் அந்த வேலையைச் செய்யவா? எனது நல்ல அம்மா!, நான் அப்படிக் கதைக்காமல் இருந்திருக்கலாம், இப்போது நான் விளையாடினால் பரவாயில்லையா? நான் எவ்வாறு எனது தவறை திருத்திக் கொள்ளவேண்டுமென எனக்கு சொல்லித் தருவீர்களா? நான் என்ன செய்ய வேண்டும்?

இந்த வார்த்தைகளை நாமும் பிள்ளையுடன் தினமும் கதைக்கும்போது பயன்படுத்துவோமாயின் பிள்ளையும் இவ்வாறான வார்த்தைகளை கதைக்கும்போது பயன்படுத்துவதற்கு கற்றுக்கொள்ள இலகுவாக இருக்கும்.

6. **பிள்ளை நன்றாக நடந்து கொள்ளும்போது, அதாவது பதிலுக்குப்பதில் கதைக்காது நன்கு கதைக்கும்போது பிள்ளையைப் பாராட்டுங்கள்.**

அந்நடத்தையை பாராட்டி ஊக்கப்படுத்துங்கள். உங்களது அன்பு, பாராட்டு வழங்கல் போன்றவற்றை அச்சந்தர்ப்பங்களில் செய்ய மறக்க வேண்டாம். அதேபோன்று, அவர் அதனை தவறாகச் செய்தால் அதனை சரியாகச் செய்வதற்கு, உங்கள் உதவி, ஒத்துழைப்புக் கிடைக்கும் எனப் பிள்ளைக்கு உறுதியளியுங்கள். இவ்வாறான விடயங்களைக் கதைப்பதற்கு நாளொன்றில் நேரமொன்றினை ஒதுக்கிக் கொள்ளுங்கள்.

7. **எப்போதும் பிள்ளை மீது உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள்.**

**தொடர்பிற்கு நேரத்தை ஒதுக்குங்கள்.** உங்கள் பிள்ளை பாடசாலையில் ஒதுக்கப்படுவதாக உணர்ந்தால் அல்லது வீட்டில் ஒரு பக்கத்திற்கு ஒதுக்கப்படுவதாக உணர்ந்தால் உங்களுடன் பிள்ளைக்கு தனித்தனியான நேரம் தேவைப்படுகின்றது. பிள்ளையிடம் காணப்படும் எதிரான சக்தியை சிறிய கவனிப்பினூடாக இல்லாமல் ஆக்கலாம். அவருடன் நடக்கலாம் அவனுக்கு அல்லது அவளுக்கு வாசித்துக் காட்டலாம் அல்லது சிற்றுண்டியை பகிரும் பொழுது ஒன்றாகக் கதைக்கலாம்.

8. **பெரியோர் என்ற ரீதியில், நீங்களும் பதிலுக்குப்பதில் கதைப்பதனை நிறுத்துங்கள்.**



சிலவேளை, “நாங்கள் பெரியவர்கள்தானே, நமக்கு மாத்திரமே பிள்ளைக்கு எதையும் கூறுவதற்கான உரிமை இருக்கின்றது. நாம் சொல்வதனை கேட்பதும், அதனை பின்பற்றுவதையுமே பிள்ளை செய்ய வேண்டும்” என சில பெற்றோர்கள் நினைக்கின்றனர். அப்படி நினைக்கும்போது, பிள்ளை நாம் கூறும் விடயங்களுக்கு வழங்கும் பதில்கள் எமக்கு, பதிலுக்குப்பதில் கதைப்பதாகத் தோன்றலாம்.

**9. எதிர்வினைகளுக்கு ஏற்ப செயற்படுங்கள்.**

நீங்கள் சொன்ன விடயத்தை செவிமடுக்காது செயற்பட்டால் அதன் பின்னர் அதன் விளைவுக்கு அமைய அவருக்கு வழங்கப்பட்ட சலுகைகளைக் குறையுங்கள். இல்லையெனில், அவரது வயதிற்கேற்ற மேலதிக பொறுப்புக்களை வழங்குங்கள்.

உ-ம்: அறையைக் கூட்டி சுத்தம் செய்தல், படிக்கும் மேசையை ஒழுங்கமைத்தல், வீட்டுத் தோட்டத்தைப் பராமரித்தல்.

**10. உங்கள் நடத்தையில் தவறு உள்ளது என நீங்கள் அறிந்தாலோ அல்லது பிள்ளை அதனை உங்களிடம் சுட்டிக்காட்டினாலோ, உங்கள் நடத்தையை மாற்றிக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.**

பிள்ளை தனக்கு முக்கியமானது என கருதும் வேலையை செய்து கொண்டிருக்கும்போது, நீங்கள் அவருக்கு சில வேலைகளை வழங்கினால், நீங்கள் அவரது சுதந்திரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றீர்களென அவர் நினைக்கலாம்.

உ-ம்: அவருக்குப் பிடித்தமான தொலைக்காட்சி நிகழ்ச்சி போகும்போது, இல்லையெனில், பாடசாலை வேலையைச் செய்யும்போது, நீங்கள் அவருக்கு வேறு வேலையொன்றை செய்யச் சொல்லல

இதனாலும் பிள்ளை பதிலுக்குப்பதில் கதைக்கலாம். அப்படியான காரணத்தைப் பிள்ளை முன்வைத்தால், அவற்றை மதித்து உங்களது நடத்தையை மாற்றிக் கொள்ளுங்கள்.

உ-ம்: “வேலை ஒன்றை செய்வதற்கு எப்போதும் நானே தேவைப்படுகின்றேன். ஏன், இந்த வீட்டில் வேறு யாரும் இல்லையா?”

இந்த குரலுக்கு செவிமடுத்து சரியான பதில் ஒன்று வழங்கவில்லையெனின், “இதனை இவர்களுக்குச் சொல்லிப் பயனில்லை” என்று பிள்ளை நினைக்கலாம். இதனால் உங்களுக்கும் பிள்ளைக்கும் இடையிலான உறவில் விரிசல் உருவாக ஆரம்பிக்கலாம்.

**உசாத்துணை**

McCready, A. (2021), *Positive Parenting Solutions*. Retrieved from Why do kids talk back?: https://www.positiveparentingsolutions.com/parenting/why-do-kids-talk-back

Pickhardt, C. E. (2020), Adolescence and the Age of More "Talking Back". *Psychology Today*.

# குறிப்புக்கள்

# குறிப்புக்கள்

unicef
for every child
සෑම දරුවෙක් වෙනුවෙන්ම
ஒவ்வொரு சிறுவர்களுக்காகவும்

சிறுவர் பாதுகாப்பு
3/1 ராஜகீய மாவத்த
கொழும்பு 7
இலங்கை
www.unicef.lk

ISBN : 978-92-806-5110-2

© ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF)
சித்திரை 2023

ISBN 978-92-806-5110-2
9 789280 651102